820

REGD. No M. 2913.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ. 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 12
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணா 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்ரம-ஸ்ரீ ஐப்பசி-மீ 22உ 1940-ஸ்ரீ நவம்பர்-மீ 7உ | ஸ-43

ஸ்ரீ ஸுபாஷ் சந்திர போஸ்

இந்தியா சட்டசபை மெம்பரானர்.

இந்தியா சட்டசபையில் காலியாயிருந்த ...ங்காள ஸ்தானமொன்றுக்கு ஸ்ரீமான் ...ஸுபாஷ் சந்திர போஸ் தேர்ந்தெடுக்கப்பட்... இவருக்குப் போட்டியாக நின்ற ...பல ஸ்தர்கள் வாபீஸ் பெற்ருர்கள். ...போஸ் சிறையிலிருந்த போதிலும் வைஸ் ...ன் விசேஷ அநுமதியின் பேரின் சட்ட ...பக் கூட்டத்தில் கலந்துகொள்ள கவர் ...ண்டார் ஏற்பாடு செய்வார்களெனத் தெரிகிறது.

தீவ்ரவாதியான, போஸ் சட்டஸபைக்கு வந்து கவர்ன்மெண்டுடன் ஒத்துழைக்க முற்பட்டிருப்பது விசேஷமென ஸர்க்கார் நினைப்பதாகத் தெரிகிறது.

புதிய ராஜீயக்கக்ஷி வேண்டும்.

எம். என். ராய் முயற்சி

தீவிர காங்கிரஸ் வாதியான ஸ்ரீமான் எம். என் ராய் வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் காங்கிரஸின் தற்காலப்போக்கைப் பலமாகக் கண்டித்துவிட்டு தற்காலம் பாஸிஸ்ட்கொள்கை நம்தேசத்தில் பரவவொட்டாமல் தடுக்கவேண்டியதற்காக இந்த யுத்தத்தில் பிரிட்டனுக்கு உதவிபுரியவேணுமென்றும், தீவிர ஜனநாயக கட்சியொன்று அமைத்து வேலைநடத்த வேணுமென்றும் கூறியிருக்கிருர்.

51 லக்ஷம்.

சென்னை மாகாணத்தில் கவர்னர் சேகரித்து வரும் யுத்தநிதிக்கு இதுவரையில் 51 லக்ஷம் ரூபாய்கள் சேர்ந்திருக்கின்றன.

ஹிட்லரின் துடுக்கு

இந்தியர்களை நிந்திக்கிருர்

ஹிட்லர் எழுதிய புத்தகமாகிய "மெயின் காம்ப்" என்றதில் அவர் இந்தியர்களைப் பற்றி வெகு கேவலமாக தூஷணை செய்திருப்பதாக ஸ்ரீமான் ஸர்க்கார் எடுத்துக்காட்... [illegible] ...மலைப்பெருச்சாளிகளென்றும், உளறுவாயர்களென்றும், இந்தியர் மூளையற்றவர்களென்றும், மூளையைக்கொண்டு செய்யப்படும் வேலைகளுக்கு இந்தியர்கள் அர்ஹதையற்றவர்களென்றும் இந்தியர்களை நாய்களைபோல் பழக்கவேண்டு"மென்றும் தூஷித்திருக்கிருராம்.

ஹிட்லரை வீழ்த்த இந்தியர்களுக்கு வேறு என்ன காரணம் வேண்டும்?

"ஹரிஜன்" நின்று போயிற்று.

புதிய பத்திரிகைச் சட்டம் காரணம்.

இந்தியா கவர்ன்மெண்டார் பத்திரிகைகள் விஷயமாக ஓர் புதிய அவஸரச்சட்டம் பிறப்பித்துள்ளார்கள். பத்திரிகை ஆசிரியரோ, அச்சடிப்பவரோ, பிரசுரகர்த்தாவோ குறிப்பிட்ட ஒரு விஷயத்தை பிரசுரிக்குமுன் ஸர்க்காருக்கு அதைக்காட்ட வேண்டுமென்று கேட்க உரிமையுண்டென்றும் ஒன்றை பிரசுரிக்கக் கூடாதென்று தடுக்கவும் மேற்படி சட்டத்தின்படி அதிகாரமுண்டென்றும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. யுத்த எதிர்ப்பு பிரசார வேலையைப் பத்திரிகைகள் செய்யாவண்ணம் தடுப்பதே இதன் முக்யநோக்கமென்று ஸர்க்கார் சொல்லுகின்றனர்.

இந்தச்சட்டம் காரணமாக காந்திஜி தமது ஹரிஜன் பத்திரிகையை வெளியிடாமல் நிறுத்திவிட்டார், பெரும்பாலும் மேற்படி பத்திரிகையை உத்தேசித்தே இச்சட்டம் செய்யப்பட்டது போலும்.

வைஸ்ராயின் உத்யோக காலம்

ஒரு வருஷம் நீடிக்கப்பட்டது

ராஜப்ரதிநிதியான கனம் லார்டு லின்லித் ...

திரா...

ஈ வே. ராம...
கூட்டத்தில் 23...
காங்கிரஸுக்கும்...
மும் கிடையாதென்...
திப்பதில் தாமும் க...
ஆயினும் தென்னிந்தி...
மையோராக இருக்...
உரிமை பாதுகாக்கப்...
விஷயமாகவே அபிப்பிர...
யும், ஸர்க்கார் உத்யோக...
போன்றவைகளில் திராவிட...
கொண்டு கார்யம் செய்வத...
டிஸ் கட்சியும், தாமும் காங்...
தயாராயிருப்பதாயும் அவர்...

சீர்காழி

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளவர்கள்

மகா ஜனங்களுக்கு அனுக்ரஹஞ் செய்த ஐந்து முக்ய ஆக்ஞைகள்

ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளாகிய ஸ்ரீ ஜகத்குரு சங்கராசார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி சீர்காழி சந்நிதி வீதியில் ரிடையர்டு போஸ்ட் மாஸ்டர் பிரம்மஸ்ரீ டீ. கல்யாணராமய்யர் அவர்களின் கிரகத்தில் ஏழு மாதங்களாக பிரம்மஸ்ரீ ரா. சுப்பராமய்யரவர்களால் நடத்தப்பட்டுவரும் ஏகாதசி, பானுவாரங்களின் ஸ்ரீ சங்கரசரித, கீதோபன்யாசங்களுடன் சென்ற அக்டோபர்-மீ 1-உ-யிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு பிரதிதினமும் நடந்து வந்ததான வாராஹ, பவிஷ்யோத்திர, பாத்மபுராணாந்தர்கதமான ஸ்ரீ வேங்கடேச மாஹாத்மியமானது 28—10—40 ஸோமவாரத்துடன், ஷை உபன்யாசகரால் நன்கு உபன்யசிக்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்டது. உபன்யாசமானது நவரஸங்களுடன் கூடி பக்தகோடிகளைப் பரவசம் செய்தது. பூர்த்தியாகிய அன்றையதினம் ஆஸ்திக பக்தகோடிகள் 200-க்கு மேல் வந்து குழுமினர்கள். முடிவில் முத்திராதிகாரி பிரம்ஸ்ரீ டீ. சுப்பிரமணியய்யர் அவர்களால் ஸ்ரீ ஜகத்குரு ஆசார்ய சுவாமிகளது பின் கண்ட ஐந்து ஆக்ஞைகளை மகாஜனங்களின் மனங்களில் படிந்து உய்யவேண்டிமும் முறை, நன்கு கம்பீரமான குரலோடு வாசித்துக்காட்டி விளக்கினார்கள் அவை

[illegible]

..., ...தன் ... உப ...ஹித்து ...களை முடி ...சி பக்ஷ ...தானம் பிரம ...ள், இவைகளை ...வேண்டும்.

...கள் எல்லைக்குள் ...மேற்பட்ட புருஷர் ...ந குருவைத் தேடி ... ஜபமோ 'ராமநாம' ...காண்டு, பிரதிதினம் ஜபம் செய்ய வேண் ... ஒருவரும் அகப்படா ... அல்லது பக்கத்து கிரா ... தேவாலயத்தின் சந்நிதி ...ரம்பம் செய்து கொண்டு ... பிரதி தினம் நாம ஜபம் ...ம்.

...லங்களில் நடக்கும் பிரயோ ...க்ஞை என்ற அம்சத்தை ...ம்ஹிதையைப் பூர்த்தியாக ...சய்தவர்களுக்கே சமர்ப் ... பெறவேண்டும்.

...விவாஹங்களிலுள்ள மேளம் பந்தல் விருந்து தாம்பூலம் ஊர்வலம் முதலிய லௌகிக கார்யங்களைப் பெண்ணின் வீட்டிலேயே ஒரு நாளில் பூர்த்தி செய்து அன்றே ஆசீர்வாதம் நடத்தி அன்று இராத்திரி ஔபாஸன அக்நியுடன் பிரவேச ஹோமத்தை வரனுடைய வீட்டிலோ அல்லது விடுதியிலோசெய்து பின் மூன்றுநாள் ஒருவித லௌகீக ஆடம்பரமுமின்றி ஔபாஸனங்கள் செய்து கடைசிநாள் சேஷஹோமம் அல்லது நாகபலியுடன் பூர்த்தி செய்ய வேண்டியது.

அன்னிய மதஸ்தர்கள் நமது மதஸ்தர்களை தங்களுடைய மதத்திற்கு மாற்றயத்தனித்தால் சாத்யமான வரையில் ஸாத்வீகவழிகளில் அதைத் தடைசெய்ய வேண்டியது. நமது மதஸ்தர்களிடத்தில் அந்நிய மதங்களுக்குப் போகாத பிரசாரமும் கூடிய மட்டில் பிரயத்தினமும் செய்ய வேண்டியது.

அடிமாடுகளாக உபயோகிக்கக்கூடியவர்களுக்கு மாடுகளை விக்ரயம் செய்யாதபடிப் பிரசாரமும் கூடியவரையில் பிரயத்தினமும் செய்ய வேண்டியது.

இவ்வாறான ஐந்து ஆக்ஞைகளையும் ஆங்கு அவிடம் வந்திருந்த ஸகல ஆசார்ய பக்தியுக்தாளான ஆஸ்திக ஜனங்கள் அனைவர்களும் கேட்டுத்தெரிந்துக்கொண்டார்கள்.

அனந்தரம், உபந்நியாசகருக்கு அநேக மரியாதைகளுடன் மாலைசூட்டி, மேளவாத்தியத்துடனும் அன்னவரது விடுதியில், அநேகபக்தகோடிகளோடு கொண்டு போய்விட்டு, ஆசீர்வாதம் பெற்றனர்.

(ந-நி)

ரெவினியு டிபார்ட்மென்ட்

அதிகாரம் பெற்றிராத நபர்கள் வியாபார வரிகளை வசூலிப்பது சம்பந்தமாய்ச் செய்யப்படும் எச்சரிக்கை.

66-ம் ந. அறிக்கை

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ், 1940-ம் ஸு ஸெப்டெம்பர் மீ 2உ.

சில நபர்கள் வியாபாரவரி இலாகா உத்தியோகஸ்தர்களைப்போல் நடித்து, சில்லறைப் புகையிலை வியாபாரிகளிடமிருந்து பணம் வசூலித்து, அந்தப்படி வசூத்த தொகைகளைத் தாங்களே உபயோகித்துக் கொண்டிருக்கிறார்களென்று கவர்ன்மெண்டாருக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த நபர்கள் பார்வையிடும் வரி உத்தியோகஸ்தர்கள், பரிசோதனை செய்யும் உத்தியோகஸ்தர்கள் அல்லது லைஸென்ஸ் கொடுக்கும் இன்ஸ்பெக்டர்கள் என்றெல்லாம் தங்களைச் சொல்லிக் கொண்டு, எழுதப்படிக்கத் தெரியாதவர்களும் விஷய மறியாதவர்களுமான ஜனங்களாகப் பார்த்து மோசம் செய்திருக்கிறார்களென்றும், வரியையும் லைஸென்ஸ் கட்டணத்தையும். சரியான காலத்தில் லைஸென்ஸுகள் பெற்றுக்கொள்ளாததற்காக அபராதங்களையுங்கூட அவர்களிடமிருந்து வசூலித்திருக்கிறார்களென்றும் புகார் செய்யப்பட்டிருக்கிறது.

பொது விற்பனை வரியைக் குறித்த 1939-ல்ஸுத்திய சென்னபட்டணத்து ஆக்டின்படியும் புகையிலையை (விற்பனை செய்வதற்கு வரி விதிப்பதையும் லைஸென்ஸ் கொடுப்பதையும்) குறித்த 1939 ஸுத்திய சென்னபட்டணத்து ஆக்டின் படியும் லைஸென்ஸ் பெற்றிருக்கும் சகலமானவர்களும் வரி விதிக்கப்பெற்றிருக்கும் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது என்னவென்றால்,—

மேற்சொன்ன பெயர்களையுடைய உத்தியோகஸ்தர்கள் எவரும் இல்லை. வரி விதிப்பதற்கும் லைஸென்ஸுகள் கொடுப்பதற்கும் அதிகாரம் பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்கள் டெப்யுடி வியாபாரவரி உத்தியோகஸ்தர்கள், அஸிஸ்டன்ட் வியாபாரவரி உத்தியோகஸ்தர்கள் என்னும் இவர்கள்தாம். இவர்கள் தாசில்தாரர்கள் டெப்யுடி தாசில்தாரர்கள் ஆகிய இவர்களின் அந்தஸ்து உள்ளவர்கள். வரிகளையும் லைஸென்ஸ் கட்டணங்களையும் ரொக்கமாக செலுத்துகையில் அவைகளை ஒரு கஜானாவில் செலுத்தினாலொழிய மற்ற விஷயங்களில், பிரஸ்தாப வியாபாரி எந்த கிராமத்தில் வசிக்கிறாரோ அந்த கிராமத்தின் பெரியதனக்காரரிடமாவது, பில் கலெக்டரிடர்கள் வேலையில் அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கும் இடங்களில் வியாபாரவரி இலாகாவின் பில் கலெக்டரிடமாவது மாத்திரமே அவைகளைச் செலுத்த வேண்டுமென்றும் அப்படிச் செலுத்தப்பட்ட ஒவ்வொரு தொகைக்காகவும் ரசீதுகள் பெற்றுக் கொள்ள வேண்டுமென்றும் அவர்களுக்கு எச்சரிக்கை செய்யப்படுகிறது.

எந்த பில்கலெக்டரிடமாவது வரி அல்லது லைஸென்ஸ்கட்டணத்தைச்செலுத்துகையில், வியாபாரவரிக்கமிஷனரும் பிரஸ்தாப ஜில்லாவின் வியாபாரவரி உத்தியோகஸ்தரும் கை எழுத்துசெய்துள்ள சிவப்பு அதிகாரச்சீட்டு அட்டையொன்றை அவர் வைத்திருக்கிறாரென்று அவர்கள் சந்தேகமறத் தெரிந்து கொள்ளவேண்டும். பிரஸ்தாப இலாகாவின் நிர்வாக உத்தியோகஸ்தர்கள் எந்தக்காரணத்தை முன்னிட்டும் அபராதங்கள் விதிக்[க] ... அவர்களுக்கு அதிகாரமில்லை... யால், அபராதம் செலுத்தும்படிக் கேட்கு[ம்] யாதொரு நபரை மோசக்காரரென்று கரு[த] வேண்டும். அது சங்கதியை கிராமப்பெரி[ய]தனக்காரருக்காவது போலீஸாருக்காவ[து] உடனே தெரிவிக்கவேண்டும். லைஸென்ஸ்[தா]ரர்களும் வரி விதிக்கப் பெறுகிறவர்களு[ம்] மேற்சொன்ன சாதாரண விஷயங்களைத் தங்களுடைய சொந்த நன்மையை முன்னிட்டு ஜாக்கிரதையாய் அனுசரித்து குற்றம் செய்ய எண்ணியிருப்பவர்கள் விஷயமாய்த் தக்க நடவடிக்கை நடத்த கவர்மென்ட் உத்தியோகஸ்தர்களுக்கு உதவிசெய்வார்களென்று கவர்ன்மென்டார் நம்புகிறார்கள்.

பி. ஜீ. ஹோல்ட்ஸ்வொர்த்,
கவர்ன்மெண்ட் ஸெகரெடரி

ஆத்ரேய ரஸாயனம்.

நாடி நரம்புகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். சரீரபுஷ்டியைச்செய்யும் அசதி களைப்புச் சோர்வுகளை உடனே நிவர்த்திசெய்யும். நல்ல பசி எடுக்கும். இழந்த பலத்தை திருப்பி அளிக்கும். உத்தம ரஸாயனம்.

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சினாப்பள்ளி

ஸ்தாபகர்:-

V. B. நடராஜசாஸ்திரீ,
ஆயுர்வேதாசார்ய (Regd)

தென்னிந்தியாவின் பண்டைக்கல்லூரிகள்.

கோயில்களே பண்புச் சாலைகள்.

(கே. வரதாசாரியார் பி. ஏ. பி. எல்.)

தக்ஷசீலம், காசி, நலந்தா, விக்ரமசீலம் முதலிய இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த பல்கலைக்கழகங்கள் வட இந்தியாவிற்கே உயர்தர கலாசாலைகளாக விளங்கி வந்தன. பெரும்பாலும் அவைகள் பௌத்தசமய சங்கங்களால் அமைக்கப்பட்டும் ஆதரிக்கப்பட்டும் வந்தவை. அவ்விதமே தென்னிந்தியாவில் தேவாலயங்களே நாட்டின் உயர்தரக்கல்வியை கவனித்தும் வளர்த்தும் பெருக்கியும் வந்தன. ஏழை ஜனங்களுக்கும் தேசாந்திரிகளுக்கும் அன்னம் அளிப்பது கோயிலே, தர்மோபதேசமும் புராண ப்ரவசனங்களும் செய்வதும் கோயில்களிலேயே, ரோகிகளுக்கு சிகித்ஸை செய்யும் வைத்யசாலைகளை நிறுவுபதும் கோயிலே ஆகவே அந்தந்தகிராம நகரங்களின் பண்புசாலை, கோயிலாகவே இருந்து வந்தது. சில கோயில்கள் தங்கள் கட்டளைகளையும் ஏற்படுத்தி இடைவிடாது நடத்தியும் வந்திருப்பதாக ஆதாரங்கள் மூலமாகப் புலனுகிறது என்று டாக்டர் ஏ. எஸ். அல்டெகர் அவர் எழுதுகிறார்கள்.

பீஜபூர் ஜில்லாவைச் சேர்ந்த ஸாலோட்கி என்னும் கிராமத்திலுள்ள த்ரயீபுருஷர் கோயிலில் ஓர் பெயர்போன கலாசாலை கி. பி. 9—10 நூற்றுண்டுளில் இருந்து வந்தது. பல மாகாணங்களிருந்தும் சிஷ்யர்கள் வந்து கல்வி கற்றனர். இலவசமாகவே படிப்பு அளிக்கப்படுவதுடன் அன்னமும் அளிக்கப்பட்டு வந்தது. 27 போஜனசாலைகள் இருந்ததாகவும் விளக்குச் செலவுக்காகவே 60 ஏக்ராநிலம் விடப்பட்டிருந்ததாகவும் கல்வெட்டுகள் வாயிலாக விளங்குகிறது, பணக்காரர்களும் வியாபாரிகளும் போட்டி போட்டுக் கொண்டு இக்கலாசாலையை ஆதரிக்க முன் வந்திருக்கிறுர்கள். அக்கிராம வாஸிகளும் ஒவ்வொரு விவாஹத்தின் பொழுதும் ரூ 5 கொடுத்து உதவியிருக்கின்றனர்.

தென் ஆற்காட் ஜில்லாவில் எண்ணுயிரம் என்னும் கிராமத்தில் ஓர் பெரிய கலாசாலை இருந்து வந்தது. 340 சிஷ்யர்கள் இலவசமாக அன்னமும் வஸ்திரமும் அளிக்கப்பட்டு தங்கயிடமும் அளிக்கப்பட்டு கல்வி புகட்டப் பட்டனர். ரிக்வேத அத்யயனத்துக்காக பிரதி வருஷம் 75 பேர்களுக்கும் யஜுர்வேத ஆத்யயனம் 95 பேர்களுக்கும் ஸாமவேத அத்யயனம் 40 பேர்களுக்கும் 10 பேர்களுக்கு அதர்வணவேத அத்யயனமும் இங்கு நடந்து வந்திருக்கிறது. 15 அத்யாபகர்கள் இருந்திருக்கின்றனர். மீமாம்ஸையும் வேதாந்தமும் கற்பவர்களுக்கு இதர செலவுகளுக்காக பணமும் கொடுக்கப்பட்டு வந்திருக்கிறது. 340 ஏக்கர் நிலத்தின் வரும்படியிலிருந்து இவ்வளவு விமர்சையாக நடத்தப்பட்டு வந்ததாகத் தெரிகிறது.

செங்கல்பட் ஜில்லாவில். திருமுக்கூடலில் உள்ள வேங்கடேச பெருமாள் கோயில் 11-ம் நூற்றுண்டில் ஓர் உயர்தரக்கலாசாலையையும், அன்ன சாலையையும், வைத்திய சாலையையும் நடத்தி வந்தது. வேதாத்யயனத்துடன் வியாகரணமும் இதர சாஸ்திரங்களும் அப்யஸிக்கப்பட்டு வந்தன. இவ்வூர் சிவாலயத்தில் ஓர் பெரிய வியாகரண பாடசாலை நடந்துவந்திருக்கிறது. அதற்காக 400 ஏகரா நிலம் இருந்ததாகவும் 450 பையன்கள் படித்து வந்ததாகவும் தெரிகிறது.

குண்டூர் ஜில்லாவிலுள்ள மல்காபுரத்துக் கோவிலில் வேதங்களையும், சாஸ்திரங்களையும். ஆகமங்களையும் போதிக்கும் ஓர் கலாசாலை இருந்து வந்ததாகத் தெரிகிறது. ஒவ்வொரு அத்யாபகரும் ஒரு தச்சன் பெறுவதைப் போல் இரண்டு மடங்கு சம்பளம் பெற்று வந்ததாகத் தெரிகிறது.

இவைகளைப் போன்ற அனேக கல்லூரிகள் தென்னிந்தியாவில் கி. பி. 800–1400 வரையில் இருந்து வந்ததாகப் புலனுகிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் புன்னவாயிலில் 500 சிஷ்யர்கள் கொண்ட வியாகரண பாடசாலையும், சிகார்பூர் ஜில்லாவைச் சேர்ந்த தால குண்டாவில் ஓர் உயர்தர கல்லூரியும், தார்வார் ஜில்லாவில் ஹெப்பால் என்னுமிடத்தில் ஒன்றும், சித்தல் துர்க ஜில்லாவில் ஒன்றும், கர்னுடகத்தில் மூன்றும் இம் மாதிரியே கோயில்களில் நிறுவப்பட்டும் ஆதரிக்கப்பட்டும் வந்ததாக விளங்குகிறது.

முன்காலத்தில் அரசர்களால் அனேக கிராமங்கள் பிராமணர்களுக்கு அக்ரஹாரமென்று விடப்பட்டிருக்கின்றன. அந்தபிராமணர்கள் அந்த வரும்படியைக்கொண்டு ஏருளமான சிஷ்யர்களுக்கு அன்ன வஸ்திரங்களை அளித்துக்கொண்டு வித்யைகற்றுக் கொடுத்துக்கொண்டு வந்திருக்கின்றனர். அத்தகைய அக்ரஹாரக்கலாசாலைகளில் சில வற்றைக்குறித்து நமக்கு கல்வெட்டுகள் கிடைக்கின்றன. மைசூரைச் சேர்ந்த ஹாஸ்ஸன் ஜில்லாவிலுள்ள ஸர்வனபுரம் எல்லாவற்றையும்விட சிறந்தோங்கி விளங்கிறது. தென்னிந்தியாவில் இப்பொழுது எவ்வளவு கலாசாலைகளோ விஞ்ஞான சாலைகளோ இருக்கின்றனவோ அவைகளைவிட அதிகமாகவே முன்பு மேலே கண்டபடி கலாசாலைகள் இருந்து வந்திருக்கின்றன. கோயில்களில் ஏராளமான பிள்ளைகளுக்கு படிப்புச்சொல்லி வந்ததுடன் அவர்களுக்கு இல்வசமாக அன்ன வஸ்திரங்களும் அளிக்கப்பட்டு பொதுவாக வைத்யசாலைகளும் வைத்து காக்கப்பட்டன வென்றுல் அந்நாகரிகத்தைக் குறித்து வியக்காதவர் யார் ?

தார்மிகயுவக்சங்கம்

இருமேசுவரம்

விக்ரம-ஞு ஐப்பசி-மீ 11௳ 27-10-40 தேதியன்று தார்மிகயுவக்சங்கத்தின் 2வது ஆண்டு 2வது ஏகாதசிவிழா ஷை சங்கத்தின் பிரசிடெண்ட் பி. எல். ராமநாதசாஸ்திரியள் அவர்கள் தலைமையில் இவ்வூர் பி. மஹாதேவசாஸ்திரியள் அவர்களால் குமாரஸம்பவம் என்னும் விஷயத்தைபற்றி ரொம்ப அழகாகவும் காளிதாஸ கவியினுடைய உபமான உபமேயத்துடன் ரொம்பவும் உருக்கமாக உபன்யஸிக்கப் பட்டது. ஷை சங்கத்தின் காரியதரிசி மு. வ. சேஷா சாஸ்திரியள் அவர்களால் ஷை சங்கத்தின் சட்ட திட்டங்களையும் எடுத்து உறைக்கப்பட்டும் ஷை சங்கத்தை உள்ளூர் வாஸிகள் ரொம்பவும் முன்னேற்றத்துக்கு கொண்டு வர ஈடுபட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு வந்தோபசாரம் கூறப்பட்டு வாழ்த்து கீதம் பாடப்பட்டு தீபஆராதனையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

ந. கி

டில்லியில் ராமாயண ப்ரவசனம்

காஞ்சிபுரம் ஸ்ரீ உபய. வே. நரஸிம்ஹ தேசிகாசார்யார் அவர்கள் டில்லிதிமர்பூரில் பல பக்தர்களின் வேண்டுகோளின்படி ஸ்ரீ வால்மீகி ராமாயண ப்ரவசனம் 10–10–40 (விஜயதசமி) முதல் பிரதிதினமும் செய்து வருகிறுர்கள். டில்லியில் ராமாயண காலக்ஷேபம் இதுவே முதல் தடவையாகும். ஏராளமான தென்னிந்தியர்கள் தினந்தோறும் கதாச்ரவணம் செய்து வருகிறுர்கள். டில்லியிலிருந்து ஸ்ரீ ஜகத்குரு பூரி சங்காசார்யஸ்வாமிகளால் நடத்தப் பட்டுவரும் தர்ம ராஜ்யா ஆங்கில வாரப்பத்திரிகையின் ஜெனரல் மானேஜரும் அகில இந்திய ப்ராமண மஹா ஸபையின் காரியதரிசியுமான ஸ்ரீ டி. என். சுப்ரமண்ய சர்மா ஸ்ரீமான்கள் டி. பி. எஸ். அய்யர், பி. சி. வெங்கட்ராம அய்யர், பி. எஸ். மூர்த்தி இன்னும் அனேக ஆஸ்திகர்கள் இந்த ராமாயண காலக்ஷேபத்தை டில்லியில் நடத்திவைப்பது மிகவும் மெச்சதக்கது. ஸ்ரீராமர் பட்டாபிஷேகம் நவம்பர் 10ம் தேதி நடைபெறும்.

ந. கி

ஸ்ரீராம பட்டாபிஷேகம்

ராஜமன்னுர்குடி.

நிகழும் ஐப்பசி-மீ 16௳ வெள்ளிக்கிழமை இரவு 8-மணிக்கு திருப்பாற்கடத்தெரு பண்டரிநாத மடத்தில் ஒரு வருஷமாய் மேலக்காவேரி பிர்மஸ்ரீ சிவராம சாஸ்திரியள் அவர்களால் ப்ரவசனம் செய்யப்பட்டு வந்த ஸ்ரீமத் வால்மீகிராமாயணத்தில் ஸ்ரீராம [illegible]கப்பட்டு மங்களகரமாய் பூர்த்தி ஆயிற்று. நமது ஜகத்குரு ஸ்ரீகாஞ்சி காமகோடிபீடாதிபதி அவர்களின் அனுக்ரஹ ரூபமாக சால்வை குங்குமம் விபூதி அக்ஷதைகள் முத்ராதிகாரி ஸ்ரீதியாகராஜய்யர் அவர்களால் அத்தசமயம் சாஸ்திரியருக்கு கொடுக்கப்பட்டது.

நகரில் ஆஸ்திகர்களான லௌகீக வைதீகாகள் பலரும் வந்திருந்தார்கள். ஸ்ரீராமாயணம் வேம்பு சாஸ்திரியள் ஸ்ரீசாஸ்திரிகளுடைய குணங்களையும் யோக்யதையையும் வம்சத்தின் பெருமையையும் அத்யயன ஸம்பத்தையும் புகழ்ந்து பேசி, இந்த ஊரில் [illegible] லும் இவர்களிடம் பல நல்ல விஷயங் [illegible] அடிக்கடி கேழ்கவேண்டும் என்று [illegible] கொண்டார்கள். ப்ராமண ஸத்தர் [illegible] காலையில் பூஜை பாராயணம் ஜ [illegible] சனை முதலியவைகள் நன்கு நட [illegible] விசேஷமாய் ஸம்மானத்தினு [illegible] படுத்தினுர்கள் 1-வருஷம் [illegible] சாஸ்திரியள் ராமாயண [illegible] ஒரு ச்லோகம் கூடவி [illegible] தாரிகைபத ஸ்வார [illegible] லிவந்தார்.

சென் [illegible]

துலாபுராணம். ஸ்ரீ [illegible] தர்களது பிரார்த்தனைக்கி [illegible] ணமும் நடக்கிறது.

புதிய தமிழ் கீதைநூல் [illegible] வநெறிக்கழகத்தில் பிரு [illegible] சர்மா செய்த கீதோபதே [illegible] புராணக்கதைகளுடனும் [illegible] த்த கீதைப்பாட்டுகளுட [illegible] இயற்றிய ஸ்ரீ கீதோபதேச [illegible] நாறுடபதேசங்களுடனும் [illegible] ர்வ விஷயங்களுடனும் [illegible] பெனி ஸ்ரீ நாராயணசா [illegible] கிறுர் விரைவில் வெளிவ [illegible]

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृताम्।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஹூ ஐப்பசி-மீ 22உ

கனம் சாஸ்திரியாரின் சிறந்த யோஜனை.

கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் 3உ யன்று சென்னை ரேடியோமூலம் செய்துள்ள பிரசங்கத்தில் இந்திய ராஜ்ய வாழ்வு சீர்படவேண்டியதற்காக அவர் சில சிறந்த யோஜனைகளை வெளியிட்டிருக்கிறார். ஜனநாயகமும், ஓட்டு ஸ்வதந்திரமும் இந்தியாவில் விரிவு அடைந்திருந்தபோதிலும் அதனுல் ஏற்பட்டுவரும் தீமைகளை அரசியல் நிபுணர்களான பல மேதாவிகள் உணர்ந்துவருகிறார்கள். 1935ம் வருஷச் சட்டப்படி நடந்த ஜனநாயக ஆட்சியில் அந்தத் தீமைகள் பல வழிகளிலும் வெகுவாக வெளிப்பட்டபடியால் கனம் சாஸ்திரியார்,ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் போன்றவர்கள் ஜனப்பிரதிநிதிகளாக வருவோரின் யோக்யதை விஷயமாகச் செய்யவேண்டிய சீர்திருத்தத்தைப் பற்றி வற்புறுத்தவேண்டியது அவச்யமாகிவிட்டது. சட்டசபை
முனிஸிபாலிடி போன்ற ஜனப்பிரதிநிதி
[illegible]பனங்களில் பிரதிநிதிகளாக வருகிற
[illegible] நல்ல படிப்பாளிகளாயும், சிறந்த
[illegible]முள்ளவர்களாயும், பொறுப்புவாய்
[illegible]யுமிருக்கவேண்டியது அவச்ய
[illegible] மறுப்பாரில்லை. பாரத தேசத்
[illegible] ராஜ்ய அமைப்புகளில் இந்த
[illegible]க்யமாக கவனிக்கப்பட்டி
[illegible]க்காரியத்தையும் அதற்
[illegible]டையவரே செய்ய அதி
[illegible]த நிர்பந்தமான நியமம்.
[illegible]ம், நிர்வாஹமும் செய்
[illegible]த்தேர்ச்சியும், ஆழ்ந்த உல
[illegible]ல்லாதவர்களால் எப்படிச்
[illegible] ஆதலால்தான் மனு முத
[illegible]ஞேர்கள், ராஜ்ய நிர்வா
[illegible]வாஹம் முதலியவைகளைக்
[illegible]ற றிந்த மேதாவிகளே
[illegible]வர்களென்று நியமித்தார்

[illegible]விமான்களும் அனுபவசாலி
[illegible]ப மந்திராலோசனைகளில் கல
[illegible]ைமடையவர்களென்பது நிர்
[illegible]யம். இந்த தத்வமானது
[illegible] இந்தியாவில் உறைக்க
[illegible]து. தற்போது நமது
[illegible]ம்முனிஸிபாலிடி போன்றவைகளிலும் நமக்கு பிரதிநிதிகளாக வருகிறவர்களுக்கு தங்கள் கடமையை நிறைவேற்றக் கூடிய படிப்போ, ராஜிய அறிவோ பொறுப்போ, இருப்பதாக யாராவது ஒப்புவார்களா?

"வேறு வேலையில்லை யென்பதற்காகவோ, பெருமையடைய வேண்டுமென்பதற்காகவோ, அல்லது அடுத்த விட்டுக்காரனை நசுக்கலா மென்பதற்காகவோ, அல்லது பணம் ஸம்பாதிக்கலாமென்பதற்காகவோ, நீங்கள் அரசியல் வேலைகளில் புகக்கூடாது"

என்று கனம் சாஸ்திரியார் சொல்லுவது போல் படிப்பற்றவர்கள்கூட பலர் டம்பத்திற்காக ஜனப்பிரதிநிதி ஸ்தானத்தை வஹிக்கும்படியாயிருக்கிறது. ஒரு மோட்டார் ஓட்டுபவனுயிருந்தால் அந்த யோக்யதையுள்ள அதிகாரி யொருவனுக்கே அந்த வேலையைக் கொடுக்கிறோம். இம்மாதிரி எந்தக் காரியத்தையும் அதற்கு தகுந்த அதிகாரியென்று நிர்மானிக்கப் பட்டவனுக்கே கொடுப்பது என்பது இயற்கை. ஆயினும் ஜனநாயக ஜனப்பிரதிநிதி ஸ்தானத்திற்கு மட்டும் எவ்வித அதிகாரமும் வரையறுக்கப்படாதது பெரிய அனர்த்தமாய் இருக்கிறது. மந்திராலோசனைக்கு வேண்டிய கல்வி அறிவுகூட இல்லாதவர்கள் ராஜ்ய காரியங்களில் கலப்பதால்தான் இந்திய ராஜ்ய கிளர்ச்சி நிலைமையில் நாணயமோ பொறுப்போ ஒன்றுமில்லாமல் தீங்கு அதிகரித்து வருகிறது. மூர்க்கத்தனமும், முறட்டுப் பிடிவாதமும்தான் தலைதூக்கி நிற்கிறதேயல்லாது தர்மமூலமான வியவஸ்தையொன்றுமே காணப்படவில்லை. இந்த அபாயத்தை நீக்கவே கனம் சாஸ்திரியார் யோஜனை சொல்லுகிறார்.

சட்டம், இஞ்ஜ[illegible], வைத்யம் ஆகிய தொழில் படிப்புப் படிப்போருக்கு ஒரு குறிப்பிட்ட கல்விப் பயிற்சி இருக்க வேண்டுமென்று இருப்பதுபோல், ராஜ்ய வேலையில் ஈடுபடுவோரும் ஓரளவு படிப்புப் பெறவேண்டும். அறியாமை வீண் புரட்டு முதலியவை அரசியல் துறையில் கெடுதல் உண்டுபண்ணக்கூடும்.

பொதுவாழ்வில் ஈடுபடுவோருக்கும் பொதுக்கல்வி போதிப்பதுடன், பிரஜா உரிமையைப்பற்றிய கல்வியும் கட்டாயமாக போதிக்கவேண்டும். இதை ஒரு பாட போதனையாகச் செய்து பரீக்ஷை நடத்திப்பட்டமும் கொடுக்கலாமாவென்பதை யோஜிக்கவேணும் முனிஸிபல் ஸபை, சட்டஸபை ஆகியவற்றிற்கு தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் இத்தகையபட்டம் பெறவேண்டுமென்று ஏன் நிர்ப்பந்தம் செய்யலாகாது? விரும்பத்தகாத உபயோகமற்ற பேர்களை ஜனபிரதிநிதி ஸ்தாபனங்களிலிருந்து இதன்மூலம் ஏன் விலக்கக் கூடாது."

இவ்வாறு கனம் சாஸ்திரியார் பேசியிருப்பதில் வியாக்யானம் செய்யவேண்டிய அம்சமெதுவுமில்லாமல் வெகு தெளிவாக இருக்கிறது.

தர்மமூலமான ஒருநியமமில்லாமல் மனம் போனபடியெல்லாம் மூர்க்கத்தனமாயும், பிடிவாதமாயும் படிப்பற்ற ஜனப்பிரதிநிதிகள் செய்துவரும் தீமைகளை தார்மிகர்கள் போதியவளவு அனுபவித்துவருகிறார்கள். ஆதலால் ஜனபிரதிநிதிகளின் யோக்யதை ஸம்பந்தமாயும் அதிகாரம் ஸம்பந்தமாயும் கட்டாயமாக ஓர் வியவஸ்தை சட்டமூலமாக ஏற்படுத்தி அநதிகாரிகளால் ஏற்படும் குழப்பத்தைத் தடுக்கவேண்டியது ஸர்க்காரின் கடமையாயிருக்கிறது.

ஜவஹருக்கு நான்கு வருஷ கடுங்காவல் தண்டனை

ஸ்ரீமான் பண்டித ஜவஹர்லால் நேரு இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டதில் மாஜிஸ்ட்ரேட் மூன்று குற்றங்களுக்காக நான்கு வருஷக்கடுங்காவல் தண்டனை விதித்தார்.

காந்திஜியின் உபவாஸம்

புதிய பத்திரிகைச் சட்டத்தை ரத்துசெய்யாத வரையில் தாம் சாகும் வரையில் உபவாஸஹடம் செய்யப்போவதாகச் காந்திஜி வைஸ்ராயிக்குக் கடிதமெழுதியிருக்கிறார். சீக்கிரத்தில் உபவாஸம் ஆரம்பமாகும்.

புதிய வரிகள்

இந்தியா சட்டஸபைக்கூட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. யுத்தச்சிலவு முதலிய அதிகச்செலவுகளுக்கு ஈடு செய்யவேண்டி சில,புதிய வரிகள் விதிக்க மசோதாகொண்டுவரப்பட்டிருக்கிறது. கவர் விலை ஒன்றேகாலணு. புக்போஸ்ட்களுக்கு முக்காலணு ஆரம்பம். வருமான வரி 25 வீதம் சார்ஜ் செய்யப்படும் தந்திக்கட்டணத்தில் ஒரு அணு அதிகம். இம்மாதிரி சிலபுதியவரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

பாலஸ்தீனத்தைப் பிரிக்க ஏன் ஸம்மதிக்கவில்லை?

இந்தியப்பிரிவினையும் அத்தகையதே

டாக்டர் நாயிடு சாட்டை

மஹம்மதியர்கள் இந்தியாவைத் துண்டாக்கி மஹம்மதிய இந்தியா, ஏற்படுத்திவிடுவதற்கு துடிக்கின்றனர். ஆனுல் பாலஸ்தீனத்தில் யூதர்களுக்கு ஒரு பாகத்தைப் பிரித்துக் கொடுப்பதை இந்திய மஹம்மதியர்கள் ஜின்னு உள்பட எதிர்க்கிறார்கள் ஏன்? தங்கள் தேசத்தில் பிறர்வரக்கூடாது ஆனுல் பிறதேசமாகிய இந்தியாவில் பட்டும் மஹம்மதியர்கள் தங்களுக்குப் பங்கு கேட்கலாம் போலும்? என்று சேலத்தில் டாக்டர் நாயுடு சாட்டை கொடுத்து பேசினர்.

துலாபுராணப்ரவசனம்

கும்பகோணம் மேட்டுத்தெரு அக்ராஹாரம் ஸ்ரீ விசாலாக்ஷி ஸ்ரீ விஸ்வநாத ஸ்வாமி சமேத ஸ்ரீ செங்கழனீர் விநயகர் ஆலயத்தில் ஸ்ரீமத் பகவத்பாதாசார்யாள் அனுக்ரஹத்தை முன்னிட்டு ஐப்பசிமீ 1உ முதல் ஒரு மாதம் வரையில் பிரதி மாலை 4 மணிக்கு துலா புராணப்ரவசனம் பிரம்மஸ்ரீ கச்சபேஸ்வர சாஸ்திரிகளவர்களால் நடைபெற்று வருகிறது.

ஐப்பசி மீ 11உ (27—10—40) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஏகாதசியை முன்னிட்டு ஸ்ரீமத் பரமாசார்யாளின் ஆக்ஞைப்பிரகாரம் பிரம்மஸ்ரீ கச்சபேஸ்வர சாஸ்திரிகளால் தத்தாத்ரேய சரித்திரம் உபந்யஸிக்கப்பட்டது. ஆஸ்திக சிரோன்மணிகள் திரளாக விஜயம் செய்து கதாச்ரவணம் செய்தார்கள்.

டி. ஜே. கிருஷ்ணமூர்த்தி. ஸ்ரீமடம் முத்ராதிகாரி.

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா)

ஏழ்மைக்குபபலி!! திருப்பதி பாடசாலை மாணவர் ஏழ்மையால் தான் சாவதாக எழுதி வைத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டான். யார் மீது குறை கூறுவது' சராசரி வாரத்திற்கோர்பலியாவது நடக்கிறது!!

திருமலைக்கு மோட்டார் வழி!! மூன்று லக்ஷத்து 77 ஆயிரம் ரூ செலவில் திருப்பதி மலைக்கு ஓர் பாதை போட ஷை தேவஸ்தான ஸபை தீர்மானித்தது. ரயில் போட பொது ஜனங்கள் ஆக்ஷேபித்ததால் இதைச் செய்கிறதாம். பஸ்விடுவதானால் ரயில்போட்டிருத்தலே மேலாகும். பொருப்போம்.

விழுப்புரம் பஜனை மண்டலி! இது பண்டிதர்களைக் கண்டால் சும்மாவிடுவதில்லை. ஏதோ குடும்பகார்யமாகச்சென்ற ஸ்ரீசோமதேவ சர்மாவைக்கொண்டு ஸ்ரீ லலிதா விஜயம் என ஓர் உபன்யாஸம் செய்தனர். இரண்டு மணி அவகாசத்திற்குள் திரள் திரளாக பக்தர் கூடியது சென்ற ஆண்டு நடந்த தெய்வநெறிக்கழக ஸபையால் என்பது திண்ணம்.

ஸம்ஸ்கிருத வரவேற்பு!! விழுப்புரம் நகரஸபை உயர்தர கலாசாலையில் ஸ்ரீ ஸோமதேவ சர்மாவுக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஓர் ஸ்வாகத பத்ரமளித்து ஷை பாஷாபிவிருத்தி சபையைத்துவக்கும்படி அதிகாரிகள்வேண்டினர். 1 மணி பாஷையின் சுவை பெருமை ...பற்றி உபன்யாஸம் நடந்தது.

எதற்கு மகிழ்வது? ராஜமான்ய ஸ்ரீலலிதா பிரஸாத ஸ்ரீதண்டலம் ராமஸ்வாமி அய்யரெனும் நமது தலைவருக்கு தாம்பலென ஓர் கிராமமுண்டு. அங்கு மழையில்லாது தவிக்க ஓர் பண்டிதரைக்கொண்டு விராடபர்வம் பாராயணம் செய்யச்சொன்னார். ஒருவாரத்தில் வேண்டிய மழை பெய்தது!

இன்னும் சிறிது கர்லம் நிதானிக்கலாம்! ராஜப்ரதிநிதி இச்சமயம் மிக அடக்கமாகவும் தந்திரமாகவும் நடக்கிறார். மிகக்கடுமையாக யுத்தத்தை எதிர்த்து பேசும் சில்லரை தேவதைகளுடன் நிற்கலாம்.

போலீஸ் காவல் தேவை!! 1உ முதல் விளக்குகள் வெளிச்சம் குறைக்கப்பட்டதால் சென்னைக்கு காவல் மிக அவச்யம். ஒரு வாரத்திற்குஉள்ளாகவே சிலவிடங்களில்திருட்டுத்தனமதிகமாய் விட்டது. உடனே அரசாங்கமிதை கவனித்தல் வேண்டும்?

வரக்கூடாது. பேசக்கூடாது.

மாஜீ மந்திரிக்கு பங்களூரில் தடை யுத்தரவு

சென்னை மாஜி மந்திரியாகிய ஸ்ரீமான் கோபால ரெட்டி மைஸூர் ஸம்ஸ்தானத்தில் காங்கிரஸ் பிரசாரம் செய்யப்போனார். ஆனால் அவர் சில விடங்களில் நுழையக்கூடாதென்றும் சிலவிடங்களில் பேசக்கூடாதென்றும் கவர்ன்மெண்டார் தடையுத்தரவு போட்டுவிட்டார்கள். ஸ்ரீமான் காளேச்வர ராவுக்கும் இதே மாதிரி உத்திரவு போடப்பட்டது.

ஸ்ரீ துவாரகா சாரதா பீடம் கேஸ் விசாரணை

நாடியாத் ஜட்ஜியின் தீர்மானம்.

சுமார் 24 வருஷகாலமாக நடந்துவந்த ஸ்ரீ துவாரகை சாரதாபீட வழக்கில் பம்பாய் மாகாணம் நடியாத் ஸப்ஜட்ஜ் அவர்களால் சென்ற அக்டோபர் 18ம் தேதியன்று தீர்ப்பு சொல்லப்பட்டது.

ஷை பீடத்திற்கு தாம் தான் வார்சுதார் என்று நின்ற ஸ்வாமி ராஜராஜேச்வர் ஆச்ரம் என்பவரை நியாயாதிபதியானவர் போலி பிரும்மசாரி என்றும், அவர் தென் ஆற்காடு ஜில்லாவை சேர்ந்த வன்னஞ்சூர் என்கிற கிராமத்தைச் சேர்ந்தவரென்றும், கலியாணமானவர் என்றும் அவர் ஸம்ஸாரம் இன்னும் வசித்துக்கொண்டிருப்பதாயும், ஆகையால் அவர் பட்டத்துக்கு தகுந்தவர் அல்லவென்றும் ஷையாருடைய பாத்தியத்தை தள்ளிவிட்டார். மேலும் ஜட்ஜி அவர்கள் பரோடா சமஸ்தானத்துக்கு யாதொரு விதமான சம்பந்தமும் ஷை சாரதாபீட நியமனவிஷயத்தில் இல்லை என்றும் ஆகையால் ஷை ராஜாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஸ்வாமி சந்திரசேகர ஆச்ரமம் என்பவருக்கு யாதொரு விதமான பாத்தியமுமில்லை என்றும் ஷையார் மனுவையும் தள்ளி விட்டார்.

துவாரகா ஆஸ்திக ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட (Late) ஸ்வாமி திரிவிக்ரம தீர்த்தரும் ஷையார் வார்சுதாரரான (தற்காலம் பூரி கோவர்த்தன பீடாதிபதி) ஸ்வாமி ஸ்ரீ பாரதி கிருஷ்ண தீர்த்தரவர்களும் ஷையாரின் சிஷ்யரான ஸ்வாமி ஸ்ரீ ஸ்வரூபானந்த தீர்த்தரும்தான் ஷை சாரதா பீடத்திற்கு அதிபதிகளென்று ஜட்ஜ் அவர்கள் தீர்ப்பு கொடுத்தார்கள்.

இந்த கேஸ் சம்பந்தபட்ட மற்றவிஷயங்கள் விபரமாய் பின்பு பிரசுரிக்கப்படும்.

ஸ. நி.

விழுப்புரம்

மஹா மந்திர பஜன மண்டலி

24-10-40 வியாழக்கிழமை இரவு 8-15 மணிக்கு ரிடயர்ட் சென்னை ஐகோர்ட் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்டாரும், விழுப்புரம் பெஞ்சி மேஜிஸ்டிரேட் கோர்ட் பிரஸிடெண்டும், ஹிமாலயத்தைச் சேர்ந்த ஹ்ருஷிகேசம் ஆனந்த குடிரத்தில் வஸிக்கும் ஸ்வாமி சிவாநந்த சரஸ்வதிகள் ஸ்தாபித்திருக்கும் திவ்ய ஜீவிய சங்கத்தின் விழுப்புரம் கிளையின் பிரஸிடெண்டுமான ஸ்ரீ வி. வெங்கட்டருமய்யர் அவர்களின் தலைமையின் கீழ் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளின் முக்கிய சிஷ்யருமான சென்னை ஸாஹித்ய வாங்முக பூஷணம் ஸ்ரீவத்ஸவெ ஸோமதேவ சர்மா அவர்கள் “லலிதா விஜயம்” வெகு விமரிஸையாக அனேக சின்ன த்ருஷ்டாந்திரங்களுடன் உபன்யாசம் செய்தார். இம்மண்டலியாரால் பிரதி மாதமும் அடிக்கடி அறிவாளிகளால் வேதாந்த விஷயமாய் உபன்யாசங்களும், பிரதி சனி ஏகாதசிகளில் இரவில் பஜனையும் பிரதி வருஷம் செப்டம்பர்மீ 8உயில் ஸ்வாமி சிவாநந்த சரஸ்வதிகளின் “ஜனன விழா” வெகு விமரிசையாகவும் கொண்டாடப்படும். ஷை ஸ்வாமிகளின் திவ்ய ஜீவிய சங்கத்தின், சத்தியம், அஹிம்ஸை, ப்ரம்மசார்யம், முதலிய நோக்கங்களைக் கொண்டது. இதில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கோரப்படுகிறது. (ஒ. நி.)

ஏகாதசி உபன்யாஸம்

கும்பகோணம் சோலையப்ப முதலியார் அக்கிரகாரம் ஸ்ரீ விசாலாக்ஷி அம்மன் சன்னதியில் ஸ்ரீ ஆசார்யாளின் ஆக்ஞைப்படி 13—10—40 ஏகாதசியன்று ராஜபாடசாலை எட்மாஸ்டரும் வேதாந்த சிரோமணி ஸாஹித்ய சிரோமணியுமான ஸ்ரீவாஞ்சியம் பிர்மஸ்ரீ சாமினாத சாஸ்திரிகள் அவர்கள் கஜேந்திர மோக்ஷம் என்பதைப்பற்றி உபந்யாஸித்தார்கள் சுமார் 40 ஜனங்கள் விஜயமாகியிருந்தார்கள்.

27—10—40 ஏகாதசியன்று ஆக்ஞைபடி பிர்மஸ்ரீ பாகவதர் அம்பி சாஸ்திரிகள் அவர்கள் தக்கபக்க வாத்தியத்துடன் பிரகலாத சரித்திரத்தில் குருகுலவாஸம் வரையில் காலக்ஷேபம் செய்தார்கள் சுமார் 150 ஜனங்கள் விஜயமாகி இருந்தார்கள்.

10—11—40 ஏகாதசியன்று ஷை பிர்மஸ்ரீ பாகவதர் அம்பி சாஸ்திரிகள் அவர்கள் பிரகலாத சரித்திரத்தில் குருகுலவாஸம் முதல் பட்டாபிஷேகம் வரையில் தக்கபக்க வாத்தியத்துடன் கதாகாலக்ஷேபம் செய்வார்கள். அதோடு காலையில் ஷை ஸன்னதியில் மூலமும் வாசிக்கப்படும். யாவரும் விஜயமாகும்படி பிரார்த்திக்கிறேன்.

ஸுப்ரமண்யய்யர்
முத்திராதிகாரி

சென்ற ஞாயிற்றுக்கிழமை 10உ ஏகாதசியன்று டபீர் கீழத்தெரு படித்துறையில் சாயந்திரம் வழக்கம் போல் ஏகாதசி உபந்யாஸம் நடை பெற்றது. அன்று முத்ராதிகாரிக்குப் பதிலாக பிரும்மஸ்ரீ நாராயண சாஸ்திரிகள் துருவசரித்திரத்தை வெகு விமர்சையாய் உபந்யாஸம் செய்தார். முத்ராதிகாரி உபந்யாஸம் செய்யவரமுடியாமல் போய் விட்டது. அதற்கு பதிலாக தட்டாமல் நாராயணசாஸ்திரிகள் உபந்யாஸம் செய்ய ஏற்றுக் கொண்டது போற்றற்பாலது. நாரத துருவ ஸம்வாதம் மிகஉருக்கமாக சொல்லப்பட்டது. கடைசியில் துளஸிபிரஸாதம் எல்லோருக்கும் வழங்கப்பட்டது.

ஒ. நி.

காந்திஜி காங்கிரஸை விட்டு விலகவேண்டும்

வங்காள காங்கிரஸ்காரர் தீர்மானம்

வங்காளத்தில் டாக்கா ஜில்லாவில் காங்கிரஸ் ஊழியர்களின் மஹாநாடு நடந்தது. சரத் போஸிடம் நம்பிக்கையிருப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

காந்திஜீ காங்கிரஸிலிருந்து விலகி, அதன் மூலம் காங்கிரஸானது உண்மையான ஜனநாயக ஸ்தாபனமாக விளங்கும்படி வேண்டியும் மௌலானா ஆஸாத் ஸர்வாதிகாரி காங்கிரஸ் தலைமை பதவியாகிய பொம்மை ஸ்தானத்தை ராஜிநாமா செய்து அதன் மூலம் தனது மதிப்பை ஸ்தாபித்துக் கொள்ளவேணுமென்றும் அந்த காங்கிரஸ்காரர் கூட்டம் தீர்மானித்தது.

ஷஷ்டிபூர்த்தி வைபவம்

சேலம்

சேலத்தில் முன்ஸிபல் சேர்மனுகவும் கவர்மென்ட்டு வக்கீலாகவும் எல்லோருக்கும் பரமோபகாரியாகவும் இருந்து வந்த சுப்பிரமண்ய அய்யர் அவர்களுடைய புத்திரரும் சேலத்தில் பிரபல குடும்பஸ்தர்களும் உத்தம தார்மிகர்களுமான ரிடயர்ட் ஜில்லா ஜட்ஜ் ஸ்ரீ. டி. சுந்தரமய்யர் அவர்களுக்கு 26—10—40 ஸ்திரவாஸரத்தன்று ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியானது மிகவும் நன்ருக நடைபெற்றது. முதல் தினம் சுக்ரவாஸரத்தில் ருத்ரைகாசி என்ற மஹாப்ராயசித்தரூபமான கர்மாவும் ரொம்பவும் நன்ருக நடைபெற்றது. சேங்காலிபுரம் தாண்டாங்கோரை முதலிய இடங்களிலிருந்தும் வெகு ஆஹிதாக்னிகளை வரவழைத்திருந்தார்கள். பூதானம் க்ருஹதானம் கோதானம் கல்பகவிருக்ஷதானம் முதலிய மஹாதானங்களையும் சாஸ்திர முறைப்படி செய்தார்கள். பிரும்மஸ்ரீ அநந்தராமதீக்ஷிதர் அவர்கள்கூட இருந்து வெகு விமர்சையாக நடத்தி வைத்தார்கள் மேல் அகரத்திலிருந்து வேத சாஸ்திர ஸம்பன்னுளான பிரும்மஸ்ரீ ஸுந்தரகனபாடிகள் வைத்யநாத கனபாடிகள் முதலியவர்களை வரவழைத்து வேதபாராயணமும் பூர்ணமாக நன்ருக நடந்தது. அநேக ஸ்ரீமான்களும் வெகு பண்டிதர்களும் வைதிகோத்தமர்களும் வந்து மிகவும் ஆனந்தமடைந்தார்கள்.

ஸ்ரீமான் ஜட்ஜ் ஸுந்தரமய்யர் அவர்கள் ஸ்ரீ அநந்தராம தீக்ஷிதரைக்கொண்டு ஸ்ரீ பாகவதத்தை பக்ஷாஹமாக நடத்தி வருகிருர்கள் ஜட்ஜ் அவர்களுடைய க்ருஹத்தின் வாசல் கொட்டகையில் ஷை பாகவத ப்ரவசனம் நடைபெறுகிறது. ரிடயர்ட்டு ஹைகோர்ட்டு ஜட்ஜ் சுந்தரம் செட்டியார், ஜில்லா கலெக்டர், எக்ஸிகூடிவ் இன்ஜினீர், ராமசுந்தரமய்யர் முதலிய ப்ரமுகர்களும், ஆயிரக்கணக்கான இதர பக்தர்களும் வந்து கேட்டு ச்ரவணு நந்தமடைந்து கொண்டு இருக்கிருர்கள்.

ஸ்ரீ தீக்ஷிதர் அவர்களும், ஸ்ரீ சுந்தரமய்யர் முதலிய அநேக பக்தர்களுமாக, ஸ்ரீகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு அவர்கள் இவ்விடம் விஜயம் செய்யும் படியாக ஸ்ரீ ஆசார்யாளிடம் போய் பிரார்த்தித்துக் கொள்ளப் போவதாகத் தெரிகிறது.

புடார்ஜுநசர்மா

ஆனதாண்டவபுரம்

ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதீ ஸாம வேதாத்யயன பாடசாலை.

1940 ௵ அக்டோபர் ௴ 21௳ திங்கள் கிழமை காலையில் தனுர் லக்னத்தில் இவ்வூர் ஸ்ரீவரதராஜபெருமாள் கோயில் ஸந்நிதியில் பகவானுடைய கிருபையினுலும் ஸ்ரீபரமாசார்யாளுடைய அநுக்ரஹத்தாலும் "ஸ்ரீ சந்திரசேகரேந்திர ஸரஸ்வதி ஸாமவேதாத்யயனபாடசாலை"யானது கிருமவாஸிகளின் முன்னிலையில் வைதிக முறைப்படி ஆரம்பமாயிற்று. ஷை பாடசாலையின் ஆசிரியரான திருவிடமருதூர் எஸ். வி. கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகளிடம் ப்ரதம சிக்ஷையில் இரண்டு மாணவர்களும் மேல் வகுப்பில் நான்கு மாணவர்களும் வேதாத்யயனத்தை ஸதஸ்யர்களுடைய முன்னிலையில் ஆரம்பம் செய்தார்கள். ஷை பாடசாலைக்கு இன்னும் நான்கு மாணவர்கள் தேவை. ஷை மாணவர்களுக்கு சௌக்யமான இலவச ஆகார வசதியும் உண்டு. அபேக்ஷகர்கள்பாடசாலையின் ஆசிரியருக்காவது அல்லது இவ்வூர் ஸ்ரீமடம் முத்ராதிகாரிக்காவது விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

ஷை பாடசாலையின் திறப்பு வைபவத்திற்கு நைஷ்டிக பிரும்மசாரி ப்ரும்ம ஸ்ரீ பனையூர் ராமனுத சாஸ்திரிகள் விஜயம் செய்துஅநுக்ரகித்ததுமல்லாமல் வேதத்தின் மகிமை பாடசாலையின் ஆவச்யகம் இவைகளைப்பற்றியும் குரு சிஷ்யர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைமைகளைப்பற்றியும் ஸவிஸ்தாரமாக ஆங்காங்கு விசேஷ கோட்பாடுகளுடன் சபையோரின் மனதை கவரும் வண்ணம் உபந்யாஸம் செய்தார். பின்னர் பகவந்நாமாவளியுடன் ஷை வைபவமானது முடிவடைந்தது.

S. A. சுப்பிரமணிய அய்யர்.

ஏகாதசி உபன்யாஸம்

கும்பகோணம்.

விக்ரம௵ புரட்டாசி௴ 12௳யும் 27௳யும் வழக்கம் போல் ஏகாதசி உபன்யாஸம் டபீர்தெரு ஸ்ரீ மடம் முத்ராதிகாரி ஸ்ரீவாசுதேவ சாஸ்திரிள் அவர்களால் காவிரிப்படித்துறையில் ஸ்ரீ சங்கர விஜயம் நடைபெற்றது. அதில் ஸ்ரீவேதவியாஸ பகவான், காசி க்ஷேத்ரத்தில் வ்ருத்த பிராமண வேஷத்துடன் ஸ்ரீ ஆதி பகவத் பாதாள் ஆயிரக்கணக்கான சிஷ்யர்களுக்கு பாடம் சொல்லிக்கொண்டிருக்கையில், உக்ரமாய் வந்து ஸூத்ர பாஷ்யத்தைப்பற்றி வாதஞ் செய்து கடைசியில் சந்தோஷித்து தன் சுய ரூபத்துடன் பிரும்மா ஸஹிதம் அனுக்ரஹித்ததும், ஸ்ரீபகவத்பாதாள் திக்கு விஜயம் செய்ய ஆரம்பித்து சில பாஷண்டிகளுக்கு அத்வைதத்தை உபதேசித்து அவர்களுடைய சூலக்குறி முதலானதை கண்டித்தும், வழியில் குமாரிலப்பட்டாச்சாரியாரை பற்றி கேள்விப்பட்டு பார்க்க புறப்பட்டதுமான விஷயங்களைப்பற்றி விரிவாக சொல்லப்புட்டது. கடைசியில், ஸ்ரீமடம் உத்திரவுப்படி துளசிமாலை சிரவணம் செய்தவர்களுக்கு பிரசாதமாக வழங்கப்பட்டது குறிப்பிடதக்கது.

ந-நி

கும்பகோணம் சோலையப்பமுதலியார் அக்ரஹாரம் ஸ்ரீவிசலாக்ஷி அம்மன் சன்னதியில் ஸ்ரீ சங்கரபகவத்பாதாளின் ஆக்ஞைப்பிரகாரம் சென்ற 12—9—40 குருவாரம் ஏகாதசியை முன்னிட்டு ஜம்ஷட்பூரிலிருந்து வந்திருக்கும் பிர்மஸ்ரீ TV. ருமச்சந்திரசாஸ்திரிகளவர்களின் சிவகீதா உபன்யாசம் நடந்தது. சுமார் ஸ்திரி புருஷர்கள் 100 பேர் வந்திருந்து கதாசிரவணம் செய்து கடைசியில் மிலட்டூர் பிர்மஸ்ரீ ரெகுநாத சாஸ்திரிகளால் வந்தனேபசாரம் சொல்லியது.

ஷை புரட்டாசி௴ 12௳ 27—9—40 வெள்ளிக்கிழமை ஷை விசாலாக்ஷி அம்மன் சன்னதியில் திருவையார் வேதாந்த ரத்தினம் சாஸ்திர ரத்னகரம் பிர்மஸ்ரீ பா. விஸ்வநாத சாஸ்திரிகள் அவர்கள் ஏகாதசியின் மகிமை என்பதை பற்றி உபந்யஸித்தார். ஆஸ்திகர்கள் அனைவரும் விஜயம் செய்து இனிது நடந்தேரியது.

ஓ. நி.

ராமச்சந்திர அய்யர் பிரசுரம்.

பக்திஸந்தேஹத்வாந்தபாஸ்கரம் 0 4 0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனர்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

விருத்தாஜலம்.

இவ்வூர் ஸர்வேச்வரியின் அருள் வேண்டிய புதுவயல் வ. டு. ப. விலாஸ மிட்ட நாட்டுகோட்டை செட்டியார் அவர்களால் அன்னதான சத்திரமும் வருத்தாம்பாள் ஸன்னதியில் தினசரி வேதபாராயண கைங்கர்யமும் நடந்துவருகிறது. இந்த வேத பாராயணம் செய்ய நியமனம் செய்யப்பட்டவர்களால் வேதபாராயணத்திற்கு பல விக்னங்கள் ஏற்பட்டு வருகின்றன. திருவையாறு ராஜமன்னர்குடி, திருப்பாதிருப்புலியூர் சிதம்பரம் போன்ற இடங்களுக்கு முக்யமான உத்ஸவகாலங்களில் வேதபாராயணத்திற்கு சில வருஷங்களாக சென்று வருகிருர்கள். சென்ற ஆடிப்பூர உத்ஸவத்தில் இவர்கள் ஸ்வாமியுடன் கூட வேத பாராயணம் செய்யாதது மிகவும் வருந்தத்தக்கது. கோவிலில் நடக்கும் பஞ்சப்ராகார உத்ஸவங்களுக்கும் இவர்கள் ஸ்வாமிகளுடன் கூட வருவதில்லை கோவிலிலும் தினசரி வேதபாராயணம் ஒழுங்காக செய்வதில்லை நவருத்திரியை உத்தேசித்து வேத பாராயணம் ஏற்படுத்துவது பல இடங்களிலும் வழக்கமாயிருக்க இவர்கள் இந்த கைங்கர்யத்தை விட்டு விட்டு வெளியூர் சென்றிருந்தது மிகவும் அருவருப்பான விஷயம்.

இனியாகிலும் இந்த கைங்கர்யம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் பாழ்படாமல் இருக்கும்படி ஒழுங்காக நடக்குமாறு உடையவர்கள் தகுந்த ஏற்பாடு செய்வார்கள் என்று எதிர்பார்ப்பதுடன் கேட்டுக் கொள்ளவும் படுகிறது. தர்மம் நிலைக்கட்டும்.

ந. நி.

ஸிந்துவில் கோரமான நிலைமை

ஹிந்துக்கொலை அதிகரிக்கிறது

முஸ்லீம் மந்திரியின் வருத்தம்.

சுக்கூர் பிரதேசத்தில் ஹிந்துக்களைக் கொலை செய்யும் கோர கார்யம் அதிகரித்து வருகிறது. சென்ற 10 தினங்களுக்குள் 12 ஹிந்துக்கள் வரையில் சுட்டு கொல்லப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. பிரதம மந்திரி தமது வருத்தத்தை தெரிவித்தும், முஸ்லீம்களின் செய்கையை கண்டித்தும், தாம் கொலையாளிகள் மீது தீவ்ர நடவடிக்கை எடுக்கப்போவதாயும், அது முஸ்லீம் ஸமூஹத்திற்கே கஷ்ட நஷ்டங்களைக் கொடுப்பதாயிருக்குமாகையால் அந்த ஸமூஹம் இப்போதாவது இந்த துஷ்கார்யத்தை விடுமென்று நம்புவதாயும் கூறியிருக்கிருர்.

தண்டப்போலீஸ் வைக்க ஏற்பாடு நடப்பதாயும் தெரிகிறது.

ஸ்ரீ V. ஸோமதேவ சர்மா பிரசுரம்

	ரூ.	அ.	ப.
சங்கரோபதேசரத்னம்.	2	0	0
பத்ம புராணம்.	0	12	0
மார்க்கண்டேய புராணம்.	0	6	0
வாமந புராணம்.	0	6	0
வைகுண்ட ஏகாதசி.	0	0	6
ஸ்ரீ ஸ்துதிகுஸுமாஞ்சலி	0	1	0
ப்ரஹ்மவைவர்த்த புராணம்	0	12	0
கூர்ம புராணம்.	0	6	0
ப்ரஹ்ம புராணம்	0	12	0

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனர்தந பிரிண்டிங் ஒர்க்ஸ், லிமிடெட், கும்பகோணம்.

ஓர் கட்டுக்கதை.

(அகந்தை அரவக்கொடியோன் அழியாமல் இருக்க அன்னையிடம் ஆசிபெற்ற அழகு.)

(ஸ்ரீ எஸ். கே விச்வேச்வரசாஸ்திரிகள் மாஜி ஸ்கூல் இன்ஸ்பெக்டர்.)

துர்யோதனன், பாரதயுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் ஒருநாள் ஜோஸ்ய சகாதேவனிடம் சென்று, தன் தேகம் வஜ்ரகாயமாக வழி கேட்டான். அவன் மூத்தண்ணாவைக் கேட்டால் சொல்வார் என்றான். அப்படியே தருமபுத்ரரிடம் சென்றான். அவர் வரவேற்று வந்த காரணத்தை கேட்கவே எ[illegible]கு என்னுடம்பில் என்ன பாணம் பட்டாலும், ஒருவித அழிவும் ஏற்படாமல் என் தேகம் வஜ்ஜிரம் போல், சிறிதும் அழிவில்லாமல் இருக்க ஆசைப்படுகிறேன். அதற்கு ஏதாவது வழி உண்டா என்றான். தர்மபுத்ரர் ஆம் அதற்கு ஒரு மார்க்கந்தான் உண்டு. உன்தாயார் காந்தாரியம்மாள் மகா பதிவிரதை. புருஷன், பார்வையில்லாமலிருப்பதால் சிருஷ்டியின் விசேஷங்களை கண்ணால் கண்டுகளிக்க சக்தியற்றவனாக இருக்கிறான். புருஷன் அச்சுகத்தை இழந்தவன், ஆதலால் னும் புருஷனுக்கில்லாத சுகத்தைத் தனிதாயே அனுபவிக்கக்கூடாதென்ற அரிய, பெரிய விரதத்தைப் பூண்டு, தன் பார்வையைத் தானாகவே மறைத்துக் கட்டுக்கட்டிக் கொண்டு, அவன் இயற்கைக் குருடானதால், தான் செயற்கைக் குருடாய்த்தனைச் செய்து கொண்டு, பதிபக்தி பண்ணிக் கொண்டு வருகிறாள். இதன்பலனாக, அவள் திருஷ்டிபட்ட எதுவும் வஜ்ஜிரம் போல் இருக்கும், முதல் பார்வைக்கு, மாத்திரம் என்ற, ஒரே ஒரு வரம் பெற்றவள். உன் [illegible]ம் போய் சுகமாய் தேகத்தை வஜ்ஜிரகாயம் செய்துகொள் என்றார். இந்த யதார்த்த ரகஸ்யத்தைக் கேட்டு அளவற்ற மனமகிழ்ச்சிகொண்டு தாயிடம் வந்தான்.

அம்மா! தருமபுத்திரனை, என் தேகம், அழிவில்லாமல் இருக்க வழிகேட்டேன். அவன் உன்னிடம் அனுப்பினான் உனக்கு ஒருவரன் இருக்காம். உன் திருஷ்டிபட்ட இடத்திற்கெல்லாம் அழிவு இல்லை என்று சொன்னான் அது வாஸ்வந்தானா? என்றான் ஆம் அப்பா அவன் ஒரு போதும் பொய் பேசமாட்டான். ஆனால் என்னை நீ அப்படி அழிவில்லாமல் செய்யக்கூடாதா என்றான் அப்படியே ஆகட்டும் அப்பா இன்று இரவு சரியாய் 12-மணிக்கு என்னிடம் வா நீ. நான் எனக்குள்ள வரத்தின் பலத்தால் உனக்கு தேகமெங்கும் என்கண்ணால் பார்த்து அழிவே இல்லாமல் இருக்க ஆசீர்வதிக்கிறேன், தவறாமல் குறித்த நேரத்திற்கு வா என்று சொல்லி அனுப்பினாள்,

மாலையில் கிருஷ்ணபரமாத்மா பாண்டவர்களை பார்க்கவந்தார். முதலில் தருமரிடம் வரவேஅவரும் பரந்தாமனைத்தக்கப்படி உபசரித்து ஆசனத்தில் இருக்கச் செய்தார். கிருஷ்ணன், எல்லாம் சௌக்கியமா? ஏதாவது விசேஷம் உண்டா என்றார்? தருமர் சௌக்கியந்தான் தங்கள் கிருபையுள்ளவரையிலும். அதிக விசேஷம் ஒன்றுமில்லை: துரியோதனன் வந்து போனான் பிற்பகலில் ஹா! துரியோதனனா? அவன் உன்னிடம் எதற்கு வந்தான் இத்தனை பெயரையும் விட்டு? ஒன்று மில்லை தன் தேகத்தைக் அழிவில்லாமல் செய்துகொள்ள வழி கேட்டான். சரி: அதற்கு நீர் என்ன பண்ணித் தொலைச்சீர் சொல்லும். ஒன்றுமில்லை அவன் தாயாருக்கு ஒரு வரம் உண்டோன்னோ? அவள் திருஷ்டிபட்ட இடமெல்லாம் அழிவில்லாமல் இருக்குமென்று அதைச்சொல்லி தாயிடம்போய் அனுக்கிரகம்பெறச் சொன்னேன் இவ்வளவு தான். ஏன் இதுபோராதோ? இன்னும் என்ன பண்ணனும் என்கிறீர்? அவன்தேகம் அழியாமல் இருக்க நீரே வழிதேடிவைத்தால் பாரதயுத்தத்தில் நீங்கள் ஜயிக்கிறது எப்படி? நல்ல ஒன்றுமில்லை என்று சொன்னீர் நானும் தான், நினைத்துப் பார்க்கிறேன். துரியோதனன் கெட்டிக்காரன், கெட்டிக்காரன் தான். பாருமே தம்பி நால்வர் இருக்கச்சே அடியிலே இருந்து வராமால் சூட்சம் தெரிந்து உம்மண்டை வந்தானே சிண்டைபிடிக்கலாம்னு: வந்தான் சிண்டைக்கொடுத்தீர் போய்விட்டான் தன் கார்யம் ஜயம் என்று நீர் நல்லவர் என்று பேர்வைத்துக்கொண்டு ஏதாவது இடைஞ்சலை உண்டாக்கிக் கொண்டே இருக்கிறீர். எப்படியாவது போம். மற்றவர்களெல்லாம் என்னபண்ணி வைச்சிருக்காளோ உம்மைப்போல், அதைப் போய்ப்பார்க்கிறேன். என்று செலவு பெற்றுக்கொண்டார். இப்படிச் சொன்னேனேயென்று வருத்தம் வேண்டாம்: ஒன்றா, இரண்டா, மேலே மேலே உபத்ரவத்தை நாம் ஏற்படுத்திக் கொண்டால் யார் தான் என்ன செய்ய முடியும்? எனக்கு உத்திரவு கொடும்: அபயப்ரதானக்கை, ஜாடையாய்க் காட்டுவது போல் (வாத்ஸல்யத்தால்) கை தூக்கிப்போனார் கண்ணன்.

எப்போது நடுநிசி வரும் அழியாவரம் பெற என்று காத்திருக்கும் துரியோதனன் இரவு சுமார் 11½ மணிக்குத் தாயாரை பார்க்கத்தயார் செய்துகொண்டு, வஸ்திரமே இல்லாமல், ஒவ்வொரு மெத்தையாய் இறங்கிக் கீழ்ப்படியில் வரும்போது சுமார் 11¾ மணிக்கு, கையில் எதையோ மரியாதைப் பொருளை அடக்கிக்கொண்டு, சக்கிரவர்த்தி எதிரே தோன்றினார் மாயவன். அந்த நள்ளிரவில் கிருஷ்ணன் குறுக்கிடவே, ஸப்தநாடியும் ஒடுங்கி விட்டது. உடம்பில் வியர்வையெழுந்தது. அதெல்லாம் கவனிக்காதவர் போல், எல்லாம்தெரிந்த பரமாத்மா: மண்டலாதிபதியே! இதென்ன அவசரம்! நடுராத்திரியில் வஸ்திரமேயில்லாமல் எங்கேசெல்ல இறங்குகிறீர்? ஏதாவது உடம்பு குணமில்லையோ? என்ன விசேஷம் எனவும்! இதேது நம் விரோதி பக்கம் இருப்பவன், சொல்லி வைத்தவன் போல் வந்து குதித்தானே! என்று நாத்தழதழத்து, இல்லை, தர்மபுத்திரரிடம் இன்று போயிருந்தேன். தேகத்தை வஜ்ரகாயம் செய்துகொள்ள வழி கேட்டேன். என் தாயாரிடம் இருந்து ஆசீர்வாதம் பெற்றுக்கொள் என்றார். அம்மாவையும் கேட்டேன். அவன் சொன்னது உண்மையே. நீ இன்று 12 மணிக்கு வா தேகம் அழியாமல் இருக்க கிருபை செய்கின்றேன் என்றாள். அதற்காகப் போய்க் கொண்டிருக்கிறேன் இது தான் விசேஷம் என்று சுருங்கச் சொன்னான்.

என்ன சக்ரவர்த்தியே! எததற்கு யார் யாரை யோசனை கேட்பது என்பது நமக்காக இருக்கவேண்டாமா? அவன் உன் எதிரியல்லவா? விரோதியா நல்ல யோசனை சொல்வான்? எல்லாரும், அவன் உண்மை பேசுபவன், என்று மோசம் போகிறார்கள். அவன் பெரிய ஆஷாடபூதி. முழுவதும் கள்ளத்தனம். பொய்யையே சொல்லி வாய்மையுள்ளவன் என்று எங்கும் பெயர் எனக்குன்னா தெரியும் அவன் ரகஸ்ய ஒழுக்கம். தம்பிமார்களைக்கூட சேர்த்துக் கொள்ளலாமே. அவனிடம் போக உனக்கு யார் சொன்னாள்? உன்னை யுத்தத்தில் வெல்ல முடியாதென்று தெரிந்து கொண்டே, உன் தலைக்கே வழி வெச்சான். என்ன சூட்சும புத்தி அப்பா அந்த வஞ்சக, யுதிஷ்டிரனுக்கு என்னை (பாண்டவர்கள்) கட்சி என்று வீணே நினைக்கிறார்கள். நான் எல்லார் கட்சியுமே. எங்கே தப்பு நடக்கிறதோ அதைத் தடுக்கவும், ஸத்கர்மா நடக்கும் இடமெல்லாம் இருப்பதும் என் வேலை. உன்னிடத்தில் (என் தமையனார் இருக்கும் கட்சியில்) எனக்கு ப்ரீதி இருக்காதோ? உனக்கு வேண்டுமானால் என்னிடம் சந்தேகம் இருக்கலாம். இதற்குள், வேளை தப்பிப் போகிறதே என்று மயங்கினான் அரவக் கொடியோன். தர்மனையுந் தள்ளு. நான் சொன்னத்தையும் தள்ளு உன் சாதாரண சொந்த புத்தியைக் கொண்டே யோசித்துப் பார். நீ இப்படியே, எல்லா அவயவங்களும் தெரிய, மறைக்க வேண்டிய இடத்தை மறைக்காமல், இந்த வயதில், போய்த்தாயும் உன்னைப் பார்த்தால், அவளுக்கு முதலில், உன்னை சபிக்கத் தோணுமா? அனுக்ரஹிக்க வருமா! சற்று யோசி என்றார். கபடநாடக சூத்ரதாரி. சற்றுத் தயங்கினான். இது கொஞ்சம் சரியென்று பட்டது. என்ன செய்வது 5 நிமிஷமே பாக்கி இருக்கு. மேலே போய் வஸ்திரம் எடுக்க சாவகாசம் இல்லை விழிக்கிறான்.

என்ன உன்னிஷ்டபடியே போ, ஜயம் அடைவாய். தருமன் சொன்னபடியும் பார் அவன் சூதை நான் கண்டு, நிவர்த்தி செய்வதையும் பார். கோவில், ராஜாக்கள் குழந்தைகள், குரு, பெரியவர்கள், இவர்களைக் காணப் போகும்போது, வெறுங்கையோடு போகலாகாது என்று தெரிந்து, நீ ராஜாவல்லவா? ஏதோ புஷ்பம் என் கையில் அகப்பட்டது இந்த நிசி வேளையில், அதை ஒரு மாதிரி தொடுத்து வந்தேன். இந்தா, இதை அணிந்து பார் ஒட்டுச் சலடம் போல் மறையவேண்டிய இடம், மறைகிறதா? என்றார் அதைப் போட்டுப் பார்த்தான் சரியாயிருந்தது கால தாமதமும் ஆகவில்லை., போ, சுகமாய்த் தாயாரிடம், யோஜனையில்லாமல் ஆசியைப் பெறு என்று, உத்திரவு பெற்றுக் கொண்டு, அதர்மம் ஒழிக என்று எண்ணிக் கொண்டு, தன் இருப்பிடம் சென்று சுகமாய்க் கண்வளர்ந்தார் துவாரகாவாஸன்.

துரியோதனனுக்கு இது மல்லிகைபுஷ்பமாயிற்றே, தலையில் சூடவும், கழுத்தில் மாலையாப்போடவும் தகுந்ததே ஒழிய இப்படி உபயோகிப்பது சரியல்லவே என்று கூட தோன்றவில்லை "செய்தக்கவல்ல செயக்கெடும்" என்று புலவர் தமிழ் முறையில் சொல்லியதற்கிணங்க, அவன் விதி அவ்வழியே அவனைத்தள்ளிற்று.

*கிருஷ்ணன் திடப்படுத்தி விட்டாலும் அவர் மறைந்தவுடன் இப்புஷ்ப மறைவை போகும் போதே அறுத்தெரிய எத்தனை நாழி பிடிக்கும்?

"பேதைப்படுக்கும் இழவூழறிவகற்றும் என்று நாயனாரும்" "உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா" என்று முனிவர் நாலடியாரில் கூறியபடியே நடந்தது.

உடனே தாயிருக்குமிடம் வேகமாய்ச் சென்றான். இவன் வரவை ஆ[illegible]ன் எதிர்பார்த்திருந்த காந்தாரியும், எவ்வளவு நாழியாய்க் காத்திருக்கிறேன். வா அப்பா என் கண்கட்டை, அவிழ் என்றாள் அவிழ்த்தவுடன் தன் முழுஅன்போடு, தலையோடு கால் வரையில் நன்றாய்ப் பார்த்தாள். உடனே, முன்போல் கட்டிவிடச் சொன்னாள். கட்டியாய்விட்டது துரியோதனனும்காரியம் இனிது முடிந்ததற்கு மகிழ்ச்சியடைந்தான்.

பிறகு காந்தாரி, அப்பா துரியோதனா இடுப்புக்கு கீழே வெள்ளையாய்த் தெரிந்ததே என்ன அப்பாஅது என்றாள்? அவன் அதுவா அம்மா, நான் மாடி கீழ்ப்படியில் காலை வைத்தேனோ இல்லையோ கிருஷ்ணன்

(தொடர்ச்சி 8 பக்கம் பார்க்க)

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியா மருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

• • •

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல் படை, முதலிய வியாதிகளைத் தீர்க்கும்

ஓர் கட்டுக்கதை
(7 பக்கம் தொடர்ச்சி)

வந்து நின்றான் அம்மா குறுக்கே; மேலே பிள்ளை சொல்வதற்குள் அந்த மாயாச்சுதன் வந்தானெல்லியோ சரிதான்: காரியம் அவர் பக்கம் ஜயம், சொல்லு மேலே "என்றாள் தாய். மாதவன் என்னென்னமோ சொல்லி என் மனசை எல்லாம் குழப்பி, வெறுமனே வந்து கொண்டிருந்தவனை, இப்படிப் போனால், உன் சாபத்தால் சாம்பலாய் விடுவேன் என்று பயப்படுத்தி, என்னைப்பார்க்க மரியாதைக்கு கொண்டுவந்த, மல்லிகைப் புஷ்ப ஒட்டுச் சல்லடத்தைப் போட்டுக்கச் சொல்லித் திட்டப்படுத்தி அனுப்பினான் அம்மா என்றான். காத்தாரி, நான் தான் அப்போதே சொல்லிவிட்டேனே. மறைபட்ட இடமெல்லாம் என் திருஷ்டிபடவில்லை அந்த இடம் தவிற, வேறே எங்கே, யார் பாணப் பிரயோகம் செய்தாலும் உன் தேகம் அழியாது; வஜ்ர காயம் தான்.

துடையில் உயிர்நிலை என்று சொல்லாதே ஒருவருக்கும். போய் வா என்றாள் துரியோதனன், தன் மனதில் கண்டபடியெல்லாம் புண்டரீகாக்ஷனைத் திட்டிக்கொண்டு (சரியாய் முடிகிறதற்கு, பாப மூட்டை சுமர வேணுமே) தன் அறையில் போய்ப் படுத்தான்.

ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான் முந்துறும்

என்று தெய்வப்புலவர் வாயுறை வாழ்த்தில் சொல்லியதற்கிணங்க நடந்தது, அவன் அழியாவரம் பெற்ற அழகு.

நாஸிபிரசார வேடிக்கை

ஒவ்வொரு நாட்டுக்கும் வெவ்வேறு கதைகள்

மகாத்மா காந்தியும ஹிட்லரும் சமமாம்!

(மி. எல். எஸ். வைல்ட் எழுதுவது)

"லண்டன் பூராவெரிந்து சாம்பலாயிற்று" என்று ஜெர்மன் ரேடியோ இரவில் புளுகுவதைக்கேட்டுவிட்டு, காலையில் ரயிலில் புறப்பட்டு லண்டனுக்குச்செல்லும் பிரயாணி, சேதமான இடம் ஒன்றும் காணவில்லையே என்று பிரமிக்கும்போது ஜெர்மன் ரேடியோவின் அண்டப்புளுகு மறுநாளே தெரிந்து விட்டதே என்று ஆச்சரியப்படுவான்.

என்றாலும், ஜெர்மன் ரேடியோ காரியமில்லாமல் வீணுக்குப்புளுகுவதாக நினைத்து விடக்கூடாது.

சில நாள்களுக்கு முன் அமேரிக்காவுக்கும் பிரிட்டனுக்குமாய் ஜெர்மன் ரேடியோ இங்கிலீஷில் ஒலிப்பரப்பும் போது ஜெர்மன் விமானிகளுக்குத் தோன்றிய எதிர்ப்புப் பற்றிப் பின்வருமாறு கூறியது. "ஜெர்மன் வெடிகுண்டு விமானங்களை வழிமறிக்க பிரிட்டிஷ் விமானங்கள் வருவதே இல்லை. அந்தக் கஷ்டத்தைத் தவிர்க்கவே முயலுகின்றன என்பது தெரிகிறது."

அதே நாள் டென்மார்க்குக்காக டேனிஷ் பாஷையில் ஒலிபரப்புகையில், "பிரிட்டிஷார் எதிர்ப்பு முறிந்துவிட்டது. என்பதற்கு அறிகுறிகள் முதன்முதலாய்த் தென்படுகின்றன." என்றது. இம்மாதிரி மற்ற தேசங்களுக்கெல்லாம் பிரசாரம். ஜெர்மனியில் இந்த பேச்சு இல்லை.

அதற்குப்பதிலாய், ரேடியோவில் பேசும் ஜெர்மன் விமானிகள் தங்கள் எதிரிகளின் பலத்திற்கு நல்ல அத்தாட்சி கொடுத்து பேசுகிறார்கள். "ஸ்பட்பயா விமானம் மிகத்திறமையாய் வேலை செய்கிறது." ஸ்பிட்பயா விமானம் மிகச்சாமார்த்தியமாய் வளைந்து வளைந்து திருப்பி சாகஸம் காட்டியது ஒரு சமயம் தலைகீழாகப் பறக்கும் போது கூடச் சுட்டது........ என்றான் ஒரு விமானி.

தங்கள் விமானங்களுக்கு எதிர்ப்படும் எரிமலை போன்ற பீரங்கித் தீயையும்,அவை விளைக்கும் சேதத்தையும் கூட அவர்கள் அடிக்கடி குறிப்பிடுகிறார்கள். போர்ட்லந்தைத் தாக்கச் சென்ற ஒரு விமானி ரேடியோ முன் "பிரிட்டிஷ் தற்காப்பு, விமானிகளாகிய எங்களுக்கெல்லா ம்படுகஷ்டம் கொடுக்கிறது—ஐயோ, எனக்கு ஒருநாளும் அந்த மாதிரி வியர்த்ததே கிடையா."என்று ஒரு பெரு மூச்சு விட்டார்.

இங்கிலாந்தைப் படையெடுத்த முதல் பருவத்தில் ஜெர்மன் ரேடியோ பிறமொழிகளில் ஒலி பரப்பில் பேச்சுக்களை எல்லாம் கவனித்தால் ஸ்பானிஷ், ஹங்கேரிய, அரேபிய, ஜப்பானிய மொழிகளில்தான் அண்டப்புளுகும் பிரசாரம் நடக்கிறது. என்பதும் ஜெர்மன் மக்களுக்காக விடுக்கும் ஒலிபரப்பில் முக்கியமாக ஆகஸ்டு 15ம் தேதிக்குப் பிறகு அடக்கம் அதிகரித்து வருகிறது என்பதும் தெளிவாகும். பிரிட்டனுக்கு ஹிட்லர் சமாதான நிபந்தனைகள் விதிப்பதாய் உத்தேசித்திருந்தது அன்றைய தினத்தில் அல்லவா?

இந்த புளுகுப் பிரசாரத்தில் ஒரு விஷயம் கவனிக்க வேண்டும். "புளுகு மூனுப்" போரில் இதைப்போன்றதொரு உதாரணம் ரொம்ப தூரம் பின்செல்லவேண்டியதில்லை.

நார்வே யுத்தம் நடந்த சமயத்தில் பிரிட்டிஷ் கடற் படையும் ஜெர்மனியும் கைகலக்கம் இருக்கும் போது, நாஸிகள் "புளுகு மூன"ப்போரில் பிரிட்டிஷ் கடற்படையிலிருந்த கப்பல்களைக் காட்டிலும் அதிகமான கப்பல்களை முழுகடித்து விட்டார்கள். இப்படி நிகழ்ந்த அடுத்த நிமிஷமே முஸலீனி ஜெர்மனியுடன் சேர்ந்து யுத்தத்திலிறங்கத் தீர்மானித்தார். முஸலீனிக்குப் பிரிட்டிஷ் கடற்படையிலிருந்த பயம் தான் உலகறிந்த விஷயமாயிற்றே! இப்போது தெரிகிறதா நாஸிகள் புளுகுப் பிரசாரத்திற் நோக்கம்! தற்போதைய [illegible] யுத்தச் சம்பந்தமாகவும் நாஸிகள் புளுகுத் தற்காப்பு செய்து கொள்வதற்குதைப் போன்ற நோக்கம் இருக்கத்தான் இருக்கும்.

ஒவ்வோர் சமயம் கேப்பல்ஸ்துரை மீறிப் போகவும் தயங்குவதில்லை. ஜெர்மனியாரிடம் ஹாஸ்யரஸம் இருப்பதற்கு-அவர்களுக்கு அத்தகைய குணம் இருப்பதாகவே தெரியாது—மனிதவர்க்க நூலாராய்ச்சிக்காரர் இன்னும் காரணம் கூறி விளக்கவில்லை. ஆனால் கேப்பல்ஸ்தான் ஹாஸ்யரஸம் மாட்டுவதில் ஜெர்மானியார் எல்லாரையும் விடமிகவும் மேல்போனவர் என்பது திண்ணம்.

ஹிந்துஸ்தானியில் இந்தியாவுக்கு ஒலிபரப்பும்போது ஜெர்மன்ரேடியோ சொன்னது "ஹிட்லரை எவ்வளவு உயர்வாய் மதிக்கிறோமோ அவ்வளவு உயர்வாய் மகாத்மா காந்தியையும் மதிக்கிறோம். மகாத்மாகாந்தியின் தத்துவங்கள் தான் ஹிட்லரின் தத்துவங்கள். நாஸிக் கட்சியும் அஹிம்ஸையைப் போதிக்கிறது." இப்படிச் சொல்லுவதன் அந்தரங்க நோக்கம் ஒரு குழந்தைக்குக் கூடப் புரியுமே!

மாதவீவன மஹாத்மியம் உபந்யாஸம்.

திருக்கருகாவூர் அக்ரஹாரத்தில்உடையாளூர் பிர்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகள் அவர்களால் 23—10—40௨ புதன் கிழமை ஸ்ரீ ராம பட்டாபிஷேகம் நடந்து 25-10-40 வெள்ளிக்கிழமை முதல் மாதவீவன (திருக்காவூர்) ஸ்தல மஹாத்மியம் உபன்யாஸம் நடந்து வருகிறது. அக்ரஹாரத்தில் எல்லோரும் ச்ரவணம் செய்து வருகிறார்கள். ந. கி

Printed by S. Kalyansundarm, at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam
Published by A. Gopladesikachriar, and S, Kalyanasundaram.